www.padippakam.com

# மெய்ஞானக்குரல்



ஆசிரியர்:
சித்ராமணாளன்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# மெய்ஞானக்குரல்

ஆசிரியர்:
சித்ரமணாளன்

வெளியீடு:
"சீதாலயம்"
Øparken 24
Krogager
7200 Grindsted
Denmark.

படிப்பகம்

www.padippakam.com

# MEIGNAKKURAL

First Edition:
November 1993

Published by:
SEETHALAYAM
"Øpakken 24
Krogager
7200 Grindsted
Denmark.

Editor:
Chithra Manalan

Copyright:
SEETHALAYAM

Sale agent:
"EKSOTIKA"
Mr.E.Manoharan
Sjællandsgade 91
7400 Herning
Denmark.
tlf. 97 21 28 95

Printed by:
Tuli publication



படிப்பகம்

www.padippakam.com



விநாயகனே!

விக்கினங்கள்!

விலக்கிட வேண்டுகிறோம்.

திருச்சிற்றம்பலம்

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் — உருவாக்கும்
ஆதலால் வானோரும் யானை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை.

திருச்சிற்றம்பலம்.

விநாயகனே! விக்கினங்களை விலக்கி இம்முயற்சியில் நல்ல பலனைத் தந்தருள வேண்டுகின்றேன்! எல்லாம் வல்ல ஈசனே! (சிவபெருமானே!) தேவர்களைத் துன்புறுத்திய கஜமுகாசுரனைக் கொன்று தேவர்களுக்கு நல்வாழ்வழிப்பதற்காக யானைமுகத்துடன் ஞானமயமான திருமேனியைத்தாங்கித் தோன்றினீர்கள் என்பதை நாங்கள் அறிவோம். எங்கள் உடலுடன் ஒன்றிக்கிடக்கும் அசுரத்தன்மைகளை அகற்றி ஞானமயமான நல்லருளைத் தந்தருள வேண்டுகின்றோம்.



படிப்பகம்

www.padippakam.com



நாங்கள் சொல்வதைக் கேட்க பெரிய காதுகளையும், வெளிப்படை ஞானம், சூட்சம ஞானம் என்ற இருவகை ஞானங்களைப் பிரித்துணரும் அடையாளமான யானை முகத்தையுடைய எங்கள் ஐங்கரனே! எங்கள் ஐயங்களை அகற்றிட வேண்டுகின்றோம்.

தங்களுக்குப் பக்கத்தில் இருக்கும் எலி கூட தங்கள் முன் இருக்கும் பழம், பலகாரங்களைப் பார்க்காமல் தங்கள் முகத்தைப் பார்க்கும் நோக்கத்தைப் புரிந்து கொண்டோம். ஆசையை அடக்கித் தங்கள் ஆணைக்காகக் காத்திருப்பதாக அறிந்து கொண்டோம். மனிதர்களாகிய நாங்களும் ஆசைகளைக் கட்டுப்படுத்திக்கொண்டு கடவுள் அருளை நாடியிருக்கவேண்டும் என்பதையும் உணர்ந்து கொண்டோம். எங்கள் கணபதியே தங்கள் கருணைக்காகக் காலடியில் கிடக்கிறோம். அருள்தருவாய்!

அன்பே சிவம்.



படிப்பகம்

www.padippakam.com



# என் எண்ணத்தின் வண்ணம்

என் அன்பிற்குரியவர்களே! இந்த சிறிய ஆத்மீக வடிவத்தை தங்கள் இதயங்களுக்குக் காணிக்கையாக்குவதன் நோக்கம் இன்றைய காலத்தின் தேவையே. பிறக்கின்றபோதே பெற்றோர்களுக்கு மட்டுமல்லாது மதம், மொழி என்பவற்றிற்கும் சொந்தங்களாகி விடுகின்றோம். எப்படி தாய், தந்தையின் உறவை நம்மிடம் இருந்து பிரிக்கமுடியாதோ அதே போன்றதே, மதமும், மொழியும். தமிழ்மொழி வாழவேண்டும் என்ற சத்தியப்போரின் உச்சநிலை உலகநாடுகளில் நம்மை ஒரு ஏளனக்காரர்களாக நிற்க வைத்திருக்கும் இன்றைய நிலையில் மதமாற்றம் என்ற வடிவம் தன்னை திடகாத்திரமாக வளர்க்கத் தொடங்கிவிட்டது.

இந்த வளர்ச்சி பெரும் ஆபத்தானது மட்டுமல்ல அழிவுக்கான ஆரம்பமும்கூட. எனவே ஒவ்வொருவரும் தங்கள் மதங்கள் பற்றி ஆழமாக அறிவது மிகமுக்கிய தேவையாகின்றது. இதன் நிமித்தம் இந்துமதம் என்ற தூய சமுத்திரத்தில் நல்ல அறிவுக்கருத்துகக்கள் என்ற முத்தெடுத்து "மெய்ஞானக்குரல் என்ற இந்த நூலில் தொடுத்து



படிப்பகம்

www.padippakam.com



குளம்பிக் கிடக்கும் என் இதங்களை அலங்கரித்து மகிழ்விக்க சிறியேனாகிய நான் எடுக்கும் இந்த முயற்சி நான் வணங்கும் எல்லாம்வல்ல இறைவனின் இனிய வரப்பிரசாதமே! இந்த முயற்சியின் தொடர்ச்சி எப்படி அமையவேண்டும் என்பதை சிவனேசச்செல்வர்களாகிய வாசகர்களின் ஒத்துழைப்பின் தன்மையை வைத்தே முடிவு செய்வேன்.

அன்பே சிவம்.

அன்புடன்
ஆசிரியர்.



படிப்பகம்

www.padippakam.com



# "இவர்கள் கடைசிப்பயணிகள்"

## ஆட்சிப் பீடங்கள்!

இது கலியுகம் என்கிறது இந்துமதம். கலியுகம் என்றால் என்ன? கெட்டதே நல்லதாக வேடம் போட்டுக்கொண்டு செயல்படுவதே! அதனால் தான் மக்கள் நம்பிக்கை இழந்து வாழ்கின்றார்கள். மக்களிடம் நம்பிக்கை இருந்தால் மதங்களை விட்டு மதங்கள் மாறவேண்டிய தேவைகள் ஏற்படாது. மத மாற்றங்களால் குழப்பங்கள் மேலோங்கத் தொடங்கிவிட்டது. இதை வேரறுக்க வேண்டுமாயின், உண்மைகள் உயிர்த்தெழுதல் வேண்டும், உண்மைகள் உயிர்த்தெழ வேண்டுமாயின் மனங்கள் மாயையிலிருந்து விடுபடவேண்டும். அப்போழுதுதான் ஆத்மீக ஒளியின் உண்மையை மக்களால் உணரமுடியும்.

ஆள்பவர், ஆளப்படுபவர்கள் என்ற இருவகையினருக்குட்பட்டதே உலகம், ஆள்பவர் இறைவன், ஆளப்படுபவர்கள் மனிதர்கள், இறைவன் பிறப்பு, இறப்பு அற்ற ஒரே பரம் பொருள், இதை இந்து, கிறிஸ்த்துவ, இஸ்லாமிய, புத்த மத மூல நூல்கள் மிகத்தெளிவாக விளங்குகின்றன. ஆனால்



படிப்பகம்

www.padippakam.com



மனிதர்களை நல்லபடியாக ஆட்சிசெய்ய ஒரே இறைவன் பல அதிகாரிகளாகத் தன்னை பல தெய்வ அவதாரங்களாக்கியுள்ளார். இறைவன் அமைத்த ஆட்சிப்பீடங்களே மதங்கள். அவை எல்லாம் வல்ல ஒரே பரம்பொருளின் இருப்பிடத்தை அடையும் ஞானமார்க்கத்தையே காட்டுகின்றன. கல்வியறிவு மேலோங்காத காலத்தில் மக்கள் மதங்கள் மாறினார்கள். காரணம் எதையும் ஆராய்ந்து பார்க்காமல் சொல்லுவார் சொல்லே மந்திரம் என நினைத்தார்கள். அதன் விளைவு உண்மையான ஆத்மீக ஈடேற்றத்தை அடையமுடியவில்லை. எனவே அறிவுச்சுடர் பிரகாசிக்கும் இன்றைய காலத்தில் மக்கள் குழப்பத்தில் குதூகலம் கொள்ளாமல் கூடிவாழும் வாழ்க்கையை மதங்கள் மூலம் கட்டியெழுப்ப வேண்டும். அதன் மூலமே நாம் கலியை வெல்லமுடியும்.

## மாற்றங்கள்!

மாற்றம் என்பது மக்கள் மாறுவதைக் குறிப்பதல்ல. மதங்களின் அடிப்படையிலேயே ஏற்பட்ட மாற்றத்தன்மையை குறிப்பது என்பதை நாம் முதலில் புரிந்து கொள்ளவேண்டும். ஏனெனில் மதங்களுக் கெல்லாம் ஆரம்பகாலப் பொதுப்பெயர் "தர்மம்"



படிப்பகம்

www.padippakam.com



என்றே இருந்தது. அதைகாலப்போக்கில் "சமயம்" என்று மாற்றிவிட்டார்கள். "தர்மம்" என்றால் ஒரு பொருளுடன் நிலையாக இருப்பதைக் குறிக்கும். அதற்கு மாற்றமே கிடையாது. "சமயம்" என்றால் நம்பிக்கையைக் குறிப்பது. நம்பிக்கை மாறலாம், அம்மாற்றத்தின் விளைவுகள்தான் இன்றைய குழப்பங்கள்.

எனவேதான் தெய்வங்கள் விடயத்திலும் மக்கள் நம்பிக்கை இழந்து மனம் தடுமாறி நிற்கின்றார்கள். காரணம் இன்றைய மக்கள் ஏதாவது ஒரு சமயத்தைத் தழுவியவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் ஆராய்சிகளை நியாயத்தின் பக்கம் திருப்பும்போது, கடவுள் ஒருவரே என்று கூறுகின்ற மதங்களில் ஏன் பல தெய்வவழிபாடுகள் இருக்க வேண்டும் என்று கேட்பதுடன் மட்டும் நிற்காமல், அங்கே நிற்பதுதான் நியாயம் என்றும் நினைக்கிறார்கள். இதையே!

"வேறுபடு சமயமெல்லாம் புகுந்து பார்க்கின்
விளங்கு பரம் பொருளேநின் விளையாட்டெல்லாம்
மாறு படுங் கருத்தில்லை முடிவின் மேலான
வாரிதியில் நதித்திரன் போல் லயங்கிற்றம்மா"

— தாயுமானவ சுவாமிகள் —



படிப்பகம்

www.padippakam.com



எந்தச் சமயத்திற்குள் புகுந்து பார்த்தாலும் இந்த உலக விளையாட்டிற்கெல்லாம் ஒரே பரம் பொருள்தான் காரணம் எனப்புரியும் எனத் தெளிவாகக் கூறுகின்றார். அப்படியாயின் அலைபாயும் மனம் கொண்ட மனிதனால் ஒரே கடவுள் மேல் நிலையாக நிற்கமுடியுமா?

நிலையாயிருந்தால்? இந்து மதம் காட்டுகின்ற பிரமா, விஷ்ணு, சிவன், அம்பாள் போன்ற இன்னும் பல தெய்வ உருவ வழிபாடுகளும், கிறிஸ்த்துவ மதம் காட்டுகின்ற, கர்த்தர், யேகோவா, இயேசு, மாதா, போன்ற தெய்வ உருவ வழிபாடுகளும் இன்னும் நிலைத்து நிற்கின்றதே! இவ்வழிபாடுகள் மூலம் மக்கள் நல்ல பலன்களைப் பெற்றவண்ணம் இருக்கிறார்களே! ஆகவே பல தெய்வ வழிபாடுகளிலும் நியாயம் இருக்கத்தான் செய்கிறது என்ற முடிவும் தவறாக இருக்க முடியாது.
இதையே!

"மனிதர்கள் உணவில் பலசுவைகளை விரும்புகின்றார்கள், கதை, நாடகத்தில் பல பாவங்களை விரும்புகின்றார்கள், பாட்டில் பலரக தாளங்களையும், விறு விறுப்பையும் விளக்கத்தையும் விரும்பு கின்றார்கள். இப்படியான விசித்திரதன்மை



படிப்பகம்

www.padippakam.com



கொண்ட மனதால் ஏகப்பேருணர்வாக ஒரே கடவுளில் நிலையாக முடியாது. எனவேதான் விசித்திர மனதிற்கு ஏற்றவாறு ஏகப்பரம் பொருள் பல திவ்விய ரூபங்களை எடுத்துக்கொண்டு பலவித பலன்களைத் தருகின்றார்" என்று கூறுகிறார்.

— காஞ்சி மகா பெரியவர் —

பல தெய்வ வழிபாட்டால் பலன் கிடைக்கும் என்பதை கீதையும் ஏற்றுக்கொள்கிறது.

"பலன் தரும் செயல்களில் பற்றுக்கொண்டு மனிதர்கள் தேவர்களைப் பூ சிக்கின்றனர். இவ்வுலகில் இத்தகு செயல்களுக்கு உடனடி விளைவுகள் உண்டாவது உண்மையே"!

— பகவத்கீதை அத்: 4: 12 —

எனவே மனிதர்கள் தாங்கள் விரும்பி வணங்கும் தேவதைகள் மூலம் தற்காலிகமான இன்பசுகத்தைப் பெறுகின்றார்கள் என்பது நிருபணமாகிறது. அப்படியாயின் அச்சுகத்தைப் பெற்றவர்கள் முழுநிறைவான மனிதர்களா?



படிப்பகம்

www.padippakam.com



# யார் முழு நிறைவான மனிதன்?

ஒரு சாதாரண மனிதன்

1) நிச்சயம் தவறு செய்யக்கூடியவன்
2) பெரும்பாலும் மதிமயங்கி இருக்கிறான்
3) மாற்றாரை ஏமாற்றும் குணமுடையவனாக இருக்கின்றான்.
4) பக்குவம் அற்ற புலன்களால் கட்டுப்படுத்தப் பட்டவனாய் இருக்கின்றான்.

அதனால்தான் இந்துமதம் மனிதர்களை மூன்று குணமுடையவர்களாகவும் காட்டுகின்றது. அதாவது 1) அறியாமைக்குணம் 2) தீவிரக்குணம் 3) நற்குணம்.

ஆனால் நற்குணமுடைய மனிதனே தனக்குத்துன்பம் ஏற்படும்போது அதன் நிலைபற்றியும் தாங்கள் யாவர், இது போன்ற விரும்பத்தகாத சூழ்நிலையில் தாங்கள் வைக்கப்பட்ட காரணம் யாது, என்பன போன்றவற்றைப்பற்றியும் ஆராய்வார்கள். தனது துன்பத்தை வினவும் இந்நிலைக்கு எழுப்பப்பட்டா விடில் தனக்குத்துயர் வேண்டாம், துயருக்கெல்லாம் ஒரு தீர்வு காணவேண்டும் என்று உணராதவரை ஒருவன் பக்குவமான



படிப்பகம்

www.padippakam.com



மனிதன் என்று கருதப்படுவதில்லை. நற்குணம் உடையவன் மனதில் இவ்விதமான ஆராய்சி எழும் நிலையிலே மனிதத்தன்மை தொடங்குகின்றது. இத் தொடக்கமே உண்மையான ஆன்மீகவெளிக்குப் புறப்படும் பயணமாக அவனுக்கு அமையும். எனவே தற்காலிக இன்பசுகம் இல்லாத உண்மையான பேரானந்தம் கிடைக்கும் ஒரே பரம் பொருளை அடையும் முயற்சியில் இறங்குகின்றான். அந்த இலக்கை அடைபவனே முழுநிறைவான மனிதன். அவனே முக்தி அடைகின்றான்.

## முக்திக்கு வழியென்ன?

எப்படி வீணையின் நாதத்தை மட்டும் தனியாக எடுத்துக் கொள்ளமுடியாதோ அதேபோல் ஒரே இறைவனான பரம் பொருளையும் தனியாகக் காணவோ அடையவோ மனிதவாழ்வில் முடியாது. மனதை ஒரு நிலைப்படுத்தி இறைசிந்தனையுடன் தனது கடமையையும் செய்பவனே ஞானி. அந்த மெய்ஞானியால் மட்டுமே எல்லாம்வல்ல பரம் பொருளைக் காணமுடியும். அப்படியாயின் மனதை ஒரே நிலைப்படுத்துவது இலகுவான விடயமா? இதையே!



படிப்பகம்

www.padippakam.com



"பலம் பொருந்திய தோள்களை உடையவனே, குந்தியின் மகனே! அமைதியற்ற மனதை அடக்குவது சந்தேகமின்றி மிகக் கடினமே! ஆனால் நிலையான பயிற்சியாலும் பற்றின்மையாலும் செய்யமுடியும்." என்கிறார் கிருஷ்ண பரமாத்மா! .

— பகவத்கீதை அத்: 6: 35

எனவே மனதை அடக்குவது கடினம் என்பதை இறைவனே ஏற்றுக்கொள்கின்றார். ஆகவே மனம் ஒரே நிலைப்படவேண்டுமாயின் சித்தம் சுத்தமாக வேண்டும். இதற்கான வழிமுறைகள் தியானம், பிராத்தனை, பூ ஜை. இதை எல்லா மதங்களும் அங்கீகரிக்கின்றது. ஆனால் எல்லா மக்களும் இதன் மூலம் பலனடைவதும் இல்லை, திருப்தி பெறுவதும் இல்லை. ஏனெனில் அவர்கள் தியானிக்கும்போதோ சஞ்சலமான மனதைக் கொண்டிருக்கிறார்கள். இந்நேரங்களில் மனம் எப்படி இருக்கவேண்டும் என்றால்

"பணத்தை எண்ணும்போது மற்ற விவகாரங்களில் மனம் செல்வதில்லை அதே போன்றதே தியானம்" என்கிறார்.

— இராமகிருஷ்ணபரமகம்சர் —



படிப்பகம்

www.padippakam.com



எனவே மக்கள் பணம் மீது வைக்கும் பற்றுதல் போல் பக்திமேல் வைத்தால் முக்தியை அடையமுடியும்.

## முக்திக்கு தடையென்ன?

ஆத்மீக ஈடேற்றத்திற்குத் தடையே ஆசைதான். மனிதன்! மண், பொன், பெண், பொருள், புகழ் என்பவற்றில் ஆசை கொண்டவனாகின்றான். இவற்றைத் தனதாக்கிக் கொண்டால் வெற்றிபெற்ற மனிதனாகலாம் என்றும் நினைக்கிறான். அதற்காக என்ன செய்யவும் தயாராகின்றான். இப்படிப் பட்டவர்களால் என்றுமே பரமானந்த சந்நிதானத்தை அடையமுடியாது. இதையே

**"நுனியில் பிளவுடைய நூல் ஊசியின் காதுவழியே செல்லாது அதைப்போல் ஆசைகள் அற்ப்பம் இருந்தால் ஒருவன் ஈசுவர சந்நிதானத்தை அடையமுடியாது" என்கிறார்.**

**— இராமகிருஷ்ணபரமகம்சர் —**

ஆத்மவிடுதலைக்கு விரோதியே ஆசைதான் என்பதை நம்மால் உணரமுடிகிறது. இந்த ஆசையின் உந்தலே மத மாற்றங்களுக்கும்,



படிப்பகம்

www.padippakam.com



மதக் கருத்து வேறுபாடுகளும். சித்த சுத்தத்தை ஏற்படுத்தக்கூடிய கடமைகளை முறைப்படி செய்து மனதைப் பக்குவப்படுத்தாமல் மதங்கள் மாறுவதன் மூலம் திடீரென பக்குவப்படுத்தலாம் என்று நினைப்பது அறியாமைக்குணத்தின் வெளிப்பாடே! மதம் மாறினால் ஆத்மீக ஈட்டேற்றத்தைப் பெறலாம் என்று எந்த மதமும் சொல்லவில்லை. மாறாக மதம் மாறுபவர் களையும், மாற்றுபவர்களையும் மதங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றன, தண்டிக்கின்றன.

## கண்டிப்பும், தண்டிப்பும்!

ஒரு மதத்தைப் போற்றுவது நன்று. வேறு மதத்தைத் தூற்றலாகாது என்கிறது இந்துமதம்.

"தாங்கள் சார்ந்த மதங்களை விட்டு வேறு மதங்களுக்கு மாறுவது மகா பாவம். அப்படி மாறுபவர்கள் இருந்த மதத்தை மட்டுமல்லாது, சேரும் மதத்தையும் அசுத்தப்படுத்திய மகா பாவத்திற்கு உள்ளாவார்கள்" என்கிறார்.

— காஞ்சிமகா பெரியவர் —



படிப்பகம்

www.padippakam.com



இப்படியாக மதம் மாறுவதற்கான பாவத்தின் தண்டனையை மறுபிறப்பில் கட்டாயம் அனுபவித்தே தீரவேண்டும் என்று இந்துமதம் கூறுகின்றது. இப்பிறப்பில் பாவம் செய்தால் மறுபிறப்பில் தண்டனையா? இதை கேலியாகவும், போலியாகவும் எண்ணவே தோன்றுகிறது. ஆனால் இதை இந்துமதம் மிகவும் தெளிவாக்குகிறது.

மனிதக்கூட்டின் இயக்கத்தை இரண்டு உயிர்வாழிகள் நடாத்துகின்றன.

1.) உயிர்வாழி அதாவது ஜீவாத்துமா

2.) பரம உயிர்வாழி

அதாவது பரமாத்துமா. உடலுக்கு அழிவுண்டு, உயிர்வாழிகளுக்கு அழிவில்லை. ஜீவாத்துமா செய்கின்ற நன்மை தீமைகளுக்கான கணக்குகளை அவதானிப் பவராகவே பரமாத்மா செயல்படுகிறார். மரணத்தின் பின் ஜீவாத்துமா முற்பிறப்பில் எங்கே இருந்தேன், என்ன செய்தேன் என்ற நினைவுகளை இழந்த ஜீவனாகவே இருக்கிறார். பரமாத்துமாவோ ஜீவாத்துமா முற்பிறப்பில் என்ன செய்தார் என்ற விபரக்கோவையுடன் நீதிபதியின் இடத்தில் இருந்து தண்டனை கொடுக்கின்றார். எனவேதான் இப்பிறப்பின் பாவத்தை மறுபிறப்பில்



படிப்பகம்

www.padippakam.com



அனுபவிக்க வேண்டும் என இந்துக்கள் நம்புகிறார்கள்.

இதையே கிறிஸ்துவ மதத்தில் மறுகோணத்தில் அதாவது மதம் மாறுபவர்கள் பற்றிக் கூறுகிறது.

"உன் தாய்க்குப்பிறந்த உன் சகோதரன் ஆகிலும் உன்குமாரனாகிலும், உன்குமாரத்தியாகிலும் உன் பிராணனைப்போல் இருக்கின்ற உன்சிநேகிதன் ஆகிலும் உன்னை நோக்கி, நாம் போய் வேற தேவர்களைகளைச் சேவிப்போம் வாருங்கள் என்று சொல்லி

(உபாகமம் அத்: 13: 6)

"உன்னைச்சுற்றிலும் உனக்குச் சமீபத்திலாகிலும், உனக்குத் தூரத்திலாகிலும், தேசத்தின் ஒருமுனை தொடங்கி மறுமுனை மட்டுமுள்ள எவ்விடத்திலாகிலும் இருக்கின்ற சனங்களுடைய தேவர்களில் நீயும் உன்பிதாக்களும் அறியாத அந்நிய தேவர்களைச் சேவிக்கும்படி இரகசியமாக உன்னை ஏவிவிட்டால்"

(உபாகமம் அத்: 13: 7)

"அவனைக் கொலை செய்து



படிப்பகம்

www.padippakam.com



போடவேண்டும், அவனைக் கொலை செய்வதற்கு முதல் உன்கையும் பின்பு சகல சனத்தின் கையும் அவன் மேல் இருக்கக்கடவது."

(உபாகமம் அத்: 13: 9)

இப்படியாக மதம் மாற்றுபவர்கள் தண்டனைக்குள்ளாக வேண்டியவர்களே! என கர்த்தர் அனுமதி கொடுக்கிறார். எனவே இது ஆசை உடையவர்களுக்கு இறைவன் கொடுக்கும் தண்டணையாகவும் நாம் ஏற்றுக்கொள்ளலாம். எனவே பாவத்தின் தண்டணையில் இருந்து நாம் விடுபடவேண்டுமாயின் இருக்கின்ற மதங்களில் இருந்து கொண்டே ஆத்மீக ஈடேற்றத்திற்கான வழிமுறைகளைக் கடைப் பிடிக்கவேண்டும்.

இதையே!

"உள்ளே இருக்கும் சனங்கள் விழித்துக் கொண்டிருக்கும் வீட்டில் திருடர்கள் நுழைவதில்லை, நீ விழித்துக்கொண்டிருந்தால் உன் உள்ளத்தில் கெட்ட எண்ணங்கள் நுழையமாட்டா" என்கிறார்.

— இராமகிருஷ்ணபரமகம்சர் —

எனவே ஒவ்வொருவரும்



படிப்பகம்

www.padippakam.com



சார்ந்த மதங்கள் மீது நம்பிகையும் பக்தியையும் வைத்திருந்தால் அறியாமைக்குணவியல்பால் பாதிப்படையமுடியாது. பாவத்திற்குள்ளாக வேண்டியும் வராது. இதற்கு எல்லாரும் மதங்களின் ஒற்றுமையை மனங்களில் பதித்து வைத்தல் நல்லதே!

# ஒற்றுமை!

மதங்களிடையே இருக்கும் ஒற்றுமையை நாம் ஆராய்ந்து பார்க்கவேண்டும். ஏனெனில் எல்லா மதங்களும் "அன்பு" என்ற வார்த்தையால் இணைக்கப்பட்டுள்ளது. அந்த இணைப்பே உண்மைச்சமத்துவம். ஆனால் நவீனகால அரசியல்வாதிகள் சமத்துவம் என்பது பற்றி பல கருத்துக்கள் வெளியிடுகிறார்கள். ஆனால் ஆதிசங்கரர் கூறுகின்றார்

"சகல உயிர் வாழிகளிடமும் கொஞ்சங்கூட ஏற்றத்தாழ்வே இல்லாத அன்பாகிய மனோபாவமே சமத்துவம்" என்கிறார். எனவே உலகில் வாழும் மக்கள் அன்பால் கட்டுண்டால் சமத்துவ ஒளி பிரகாசிக்கத்தொடங்கிவிடும். இதற்கு உலகமக்கள் எல்லோரும் தங்கள் தங்கள் மதங்கள் என்ற வீடுகளில் இருந்துகொண்டே ஒரே இறைவனின் பிள்ளைகள் என்ற உறவில்



படிப்பகம்

www.padippakam.com



இறுக்கங் கொண்டவர்களாக இருக்கவேண்டும்.

இறைவனோடு மக்கள் நெருங்கிய இறுக்கம் கொள்ள வேண்டுமாயின், இறைவனுக்கும் மக்களுக்கும் இடையில் இணைப்புகள் இருக்கவேண்டும். அந்த இணைப்பின் ஆரம்பம் இந்துமதத்தில் ஒரு குழந்தை பிறந்தவுடன் ஆலயத்தில் வைத்து முதல் தலைமுடியை இறக்குவதாக இருக்கிறது. இதுவே கிறிஸ்தவ சமயத்தில் விருத்தசேதனம் செய்வதாக இருந்தது.

"தன்குமாரனாகிய ஈசாக்கு பிறந்த நாளிலே, ஆபிரகாம் தனக்குத் தேவன் கட்டளையிட்டிருந்தபடி அவனுக்கு விருத்த சேதனம் பண்ணினான்"

(ஆதியாகமம். அத்: 21: 4)

இப்படியே கிறிஸ்த்தவர்கள் தங்கள் இறைவனுடன் தங்களை இணைத்துக் கொண்டார்கள். இஸ்லாமியரும் ஒருவகை விருத்த சேதனம் செய்கிறார்கள், இந்தவகையில் உலகில் உள்ள மதங்கள் எல்லாம் மக்களையும் இறைவனையும் இணைக்கின்றன. ஆகவே மதங்களுக்குள் மாற்றுக்கருத்து தோன்ற இடமில்லை. ஆனால் ஆசைகொண்ட மக்களால் கருத்துமோதல் ஏற்படவே செய்யும்.



படிப்பகம்

www.padippakam.com



அந்நேரங்களில் இருமதங்களின் ஒரே கருத்தை நினைவில் கொள்ளும்போது சமாதானம் தோன்றும். அப்படி ஒரு கருத்தைக் கீழே பார்ப்போம்.

இந்துக்கள் தங்கள் ஆலயங்களிலும் சரி தங்கள் இல்லங்களிலும் சரி நடக்கும் வைபவங்களில் அக்கினியை வளர்த்து அதை இறைவனின் சாட்சியாகவும், எரியும் நெருப்பில் இறைவனைக்காணும் நம்பிக்கையை உடையவர்கள். இந்த ஐதீகம் இன்றுவரை தொடர்கிறது. அது மட்டுமல்ல, புனிதமான இடங்களில் பாதரட்சை அணியும் வழக்கமும் இல்லை. அதேபோல்!

"எகிப்த்தில் அடிமைப் பட்டிருந்த இஸ்ரேலிய மக்களை மீட்பதற்காக கர்த்தரால் அனுமதிக்கப்பட்ட "மோசே" என்பவன் ஒருநாள் ஆடுகள் மேய்த்துக் கொண்டிருந்த போது

"அங்கே கர்த்தருடைய தூதனானவர் ஒரு முட்செடியின் நடுவிலிருந்து உண்டான அக்கினிச்சுவாலையிலே நின்று அவனுக்கு தரிசனமானார். அப்போது அவன் உற்றுப்பார்த்தான். முட்செடி அக்கினியால் சுவாலித்து அது வெந்துபோகாமல் இருந்தது."

(யாத்திரகாமம். அத்: 3: 2)



படிப்பகம்

www.padippakam.com



"அவன் பார்க்கும்படி கிட்டவருவதை கர்த்தர் கண்டார், முட்செடியின் நடுவிலிருந்து தேவன் அவனை நோக்கி மோசே! மோசே! என்று கூப்பிட்டார். அவன் இதோ அடியேன் என்றான்.

(யாத்திரகாமம். அத்: 3: 4)

"அப்போது அவர், இங்கே கிட்டிச்சேராயாக, உன்கால்களில் இருக்கின்ற பாதரட்சையைக் கழற்றிப்போடு, நீ நிற்கிற இடம் பரிசுத்தபூ மி என்றார்."

(யாத்திரகாமம். அத்: 3: 5)

இப்படியாக எல்லா மதங்களிலும் ஒரே கருத்துக்கள் ஒளிர்வதைக் காணலாம். ஆனால் மதங்கள் விதித்துள்ள விதிமுறைகளை மக்கள் நடைமுறையில் கடைப்பிடிக்கும்போதே சித்த சுத்தம் ஏற்படமுடியும். அத்துடன் கடவுள் வாக்குமாறாதவர் என்ற நம்பிக்கை நமக்கு இருக்குமானால் கருத்துவேறுபாடுகளுக்கே இடமில்லை. எனவே எல்லாக் கடவுள் வணக்கங்களும் சேருமிடம் ஒன்றே.
இதையே!

"சமுத்திரத்தில் நதிகலந்து



படிப்பகம்

www.padippakam.com



சமுத்திரமாவது போல் ஒவ்வொரு கடவுளின் வழிபாடும் ஒரே பரம்பொருளான இறைவனிடமே சேர்கின்றது" என்கிறார் ஆதிசங்கரர். எனவே எல்லா மதங்களைச் சேர்ந்த மக்களும் ஒன்று சேர்ந்து தங்கள் சந்தேகங்களைத் தீர்க்கும்வகையில் வாதிட்டு நல்லமுடிவுகளை எடுக்கவேண்டும். இதையே நமது மகான்கள் காட்டியுள்ளனர்.

## நல்ல நோக்கம்!

இந்தியாவில் 72 துர்மதங்கள் இருந்ததாக வரலாறு கூறுகின்றது. அவற்றை வாதத்தால் வென்று சண்மதங்கள் என்ற பெயரில் "சிவன், அம்பாள், விஷ்ணு, பிள்ளையார், சுப்பிரமணியர், சூரியன் ஆகிய தெய்வங்களை வணக்கத்துக்குரியதாக ஸ்தாபித்தவர் ஆதிசங்கரர். இவர் கி.மு. 5ம், 6ம் நூற்றாண்டில் தென்இந்தியாவில் உள்ள மலையாள நாட்டில் காலடிக் கிராமத்தில் பிறந்தவர். இவர் வாழ்ந்த 32ஆண்டுகளில் "அத்வேதம்" என்கின்ற ஒன்றுதான் இரண்டாவது என்று ஒன்று இல்லை என்பதை நிலைநாட்டியவர். இவருடைய வழியில் கி.பி. 8ம், 9ம் நூற்றாண்டில் வாழ்ந்த அபிநய சங்கரர் உட்பட இன்று காஞ்சிமகா பெரியவராக இருக்கின்ற ஜகத்குரு வரை சங்கரர் பெயரையும்



படிப்பகம்

www.padippakam.com



இணைத்து வாழ்வதால், முன்னையவரை ஆதி சங்கரர் என அழைத்தார்கள்.

ஆனால் மத ஆராய்சி நடாத்துகின்ற உலகநிறுவனம் அபிநய சங்கரரின் வரலாற்றையே தொடக்கமாக வைத்து வரலாற்றை ஆராய்கின்றார்கள். எனவே எந்த மதம் முன், பின் தோன்றியது என்பதல்ல ஆராய்சியின் நோக்கம். உண்மையான ஆத்மீக ஈடேற்றத்தில் மதங்களும், மகான்களும் நல்வழி காட்டியுள்ளார்களா? என்று ஆராயும் நல்ல நோக்கம் இருக்கவேண்டும். எனவே ஆராய்சியின் முக்கியத்தைவிட அனுஷ்டானங்களின் முக்கியமே நல்லது என்ற எண்ணம் வேண்டும். அதன் மூலமே மனம் சுத்தமாகும். அதன்பின் ஆசையும் அறவே ஒழியும். அப்போது மெய்ஞான ஈடேற்றத்தை அடைய வாய்ப்பு உண்டு. இதை விடுத்து ஆசையின் உந்தலுக்குட்பட்டால் மோட்சத்தின் கடைசிப் பயணிகளாவது மட்டுமல்லாமல் தங்களுக்குத் தாங்களே பரமவிரோதியுமாக வேண்டியேற்படும். இதையே!

"உன்னையே நீ தாழ்த்திக் கொள்ளாதே! ஞானத்திற்கு உயராமல் கடமையைச் செய்வதில் மட்டும் இருப்பேன் என்று பிடிவாதம் பிடிக்காதே! உன்னைக் கடந்தேற்றிக் கொள்ள நீ எப்போது



படிப்பகம்

பாடுபடுகிறாயோ அப்போதுதான் நீ உனக்கே உற்ற உறவுக்காரனாக இருக்கிறாய். அப்படிப்பாடுபடமாட்டேன் என்று நீ பிடிவாதம் பிடித்தால் நீ உனக்குப் பரம சத்துருவாக ஆகிவிடுகிறாய்" என்று சொல்கிறார் பகவான்.

எனவே ஒவ்வொருவரும் தங்கள் மதங்களில் ஆழமான நம்பிக்கை கொள்ளுதல் வேண்டும். ஒரே மதத்தில் இருந்து கொண்டே ஞானப்பயணத்தில் வெற்றி கொள்ளவேண்டும். இதுவே மதங்கள் காட்டும் உண்மை. ஒரு இந்து தனது நம்பிக்கையை மாற்றி முஸ்லீமாகவும், ஒரு முஸ்லீம் தன் நம்பிக்கையை மாற்றி இந்துவாகவும், ஒரு கிறிஸ்த்துவன் தனது நம்பிக்கையை மாற்றி வேறு ஒரு மதத்தினனாகவும் மாற்றிக்கொண்டே போகலாம். ஆனால் பிறருக்குச் சேவை செய்தல் என்னும் நித்திய கடமையானது எந்தச்சூழலிலும் மத நம்பிக்கை மாற்றத்தால் பாதிக்கப் படுவதில்லை. எனெனில் மனிதர்கள் ஒவ்வொருவரும் இறைவனுக்குச் சேவை செய்யப்பிறந்தவர்களே! இதைச்சிந்தனையில் நிரந்தரமாக்கும்போது பிரச்சனைகள் வர வாய்ப்பேயில்லை.

அன்புடன்
சித்திரமணாளன்.

— முற்றும் —

www.padippakam.com



உ

# "இங்கு உள்ளதே எங்கும் உள்ளது"

மதங்கள் காட்டும் விரதங்களை கடைப்பிடிப்பதால் உள்ளத் தூய்மை ஏற்படுவதோடு மட்டுமல்லாது உடல்நோய்களும் மாறுகின்றது. இதை மருத்துவ நிபுணர்களை ஏற்றுக்கொள்ளுகிறார்கள். இந்து சமயத்தில் விரதங்களின் நாட்கள் கூடுதலாக உண்டு. அதை பெண்களே மிகவும் பக்திசிரத்தையுடன் கடைப்பிடிக்கின்றார்கள். பெண்களின் அழகான உடல் வளர்ச்சிக்கும் இவ்விரதங்கள் துணை புரிகின்றன. எனவேதான் அவ்வைப்பாட்டி சொன்னா

"உண்டிசுருங்குதல் பெண்டிற்கு அழகு" என்று. ஆனால் மேலைத்தேயப் பெண்கள் அளவற்றுச் சாப்பிட்டுவிட்டு பின்பு உடல் பருமனைக்குறைப்பதற்காக பட்டினி கிடக்கிறார்கள். இதுவும் ஒருவகை விரதம் தானே! இதனால் உடல் பருமன் குறையலாம், உள்ளத் தூய்மை ஏற்படவாய்ப்பில்லை. இந்துமதத்தில் இருந்து கிறிஸ்தவ மதங்களுக்குச் சென்றோர் சொல்லும் காரணம் இந்துக்களாக இருந்தபோது எவ்வளவோ



படிப்பகம்

www.padippakam.com


விரதங்கள் பிடித்தோம் பிரயோசனமில்லை, இப்போ விரதங்களே தேவையில்லாத இடத்தில் கர்த்தரின் அன்புடன் ஒன்றிவிட்டோம் என்கிறார்கள். கர்த்தர் என்ன சொல்லுகின்றார்.

"அவன் நசரேய விரதங் காக்கும் நாளெல்லாம் சவரகன்கத்தி அவன் தலையின்மேல் விடலாகாது. அவன் கர்த்தருக்கு என்று விரதங்காக்கும் காலம் நிறைவேறுமளவும் பரிசுத்தமாயிருந்து தன் தலைமயிரை வளரவிடக்கடவன்."

(எண்ணாகமம் 6: 5)

"அவன் கர்த்தருக்கென்று விரதங்காக்கும் நாளெல்லாம் யாதொரு பிரேதத்தண்டையில் போகக்கூடாது."

(எண்ணாகமம் 6: 6)

"கர்த்தர் உங்களோட பண்ணின உடன்படிக்கைக் பலகைகளாகிய கற்பலகைகளைப் பெற்றுக் கொள்ளும்படி நான் மலையில் ஏறியபோது, நாற்பது நாள் இரவும் பகலும் மலையில் தங்கி அப்பம் புசியாமலும் தண்ணீர் குடியாமலும் இருந்தேன்."

(உபாகமம் 9: 9)



படிப்பகம்

www.padippakam.com



எனவே கர்த்தரிடமிருந்து பத்துக்கட்டளைகள் அடங்கிய கற்பலகையைப் பெற நாற்பதுநாள் விரதம் இருந்திருக்கிறான் மோசே. தற்காலத்தில் இதை யார் கடைப் பிடிக்கின்றார்கள்? எனவே விரதங்களையும் துடக்குகளையும் பரிசுத்தவேதாகமம் முழுமையாக கடைப்பிடிக்கும்படி வேண்டு கின்றது.

இந்துமதத்தில் விரதங்கள் பிடித்தால் உடனடியாக பலன்களை எதிர்பார்பது எப்படிச்சரி? படித்துப்பட்டம் பெற்றவர்கள் தொழிலுக்காகப் போகும்போது உடனே வேலை வழங்கிவிடுகிறார்களா? இல்லை. நேர்முகப் பரீட்சைமூலம் அவரின் நல்நடத்தைகளை அறிந்தே வேலை வழங்குகிறார்கள். அதேபோலவே விரதம் பிடிப்பவர்கள் நல்ல பழக்கவழக்கங்களை உடையவராக இருந்தால் தான் நல்ல பலனை அடையலாம். இதற்கு நல்ல கதையொன்று ஸ்ரீமத்பகவதத்தில் உண்டு. அதை நாம் நினைவில் வைப்பது மிகவும் நல்லதே!

"பத்மாசுரன் என்ற அசுரன் சிவபெருமானை நினைத்து மாபெரும் தவம் செய்தான். பலவருடங்களாக தண்ணீரிலும் காட்டிலும் கிடந்து தவம் செய்யும் அவனுக்கு



படிப்பகம்

www.padippakam.com



இரங்கி சிவபெருமான் நேரில் தோன்றி என்ன வரம் வேண்டும் என்றார். பத்மாசுரன் "நான் யார் யாரில் கைவைக்கின்றேனோ அவர்கள் எல்லாம் எரிந்து சாம்பலாக வேண்டும்" என்று கேட்டான். சிவபெருமானும் அப்படியே வரம் கொடுத்துவிட்டார். ஆனால் பத்மாசுரன் சந்தேகித்தான். இவ்வளவு பெரும்வரத்தை இவ்வளவு கெதியாக தனக்கு தந்துவிட்டாரே சிலவேளை இவர் என்னை ஏமாற்றுகின்றாரோ என்று. இது உண்மையா அல்லது பொய்யானதா என்று பார்க்க சிவபெருமானின் தலைமேல் கையை வைக்க பத்மாசுரன் போகவே அவர் ஓடிச்சென்று வில்வமரத்திற்குள் ஒளித்துக் கொண்டார். தேவலோகமே அதிர்ந்துவிட்டது.

சிவனின் பரிதாபநிலையைக் கண்ட ஸ்ரீநாராயணர் பிராமணச் சிறுவனாக வந்து பத்மாசுரனை கேட்டார் "என்ன தேடுகிறீர்" என்று. அவன் நடந்தவைகளைச் சொன்னான். "இதற்கு ஏன் இவ்வளவு கஷ்டப்படுகின்றீர்கள்? உங்கள் தலையில் வைத்துப் பார்த்தால் தெரிந்துவிடும்" என்றார். அப்படியே பத்மாசுரன் செய்ய, தானே எரிந்து சாம்பலானான். நாராயணர் "வரங்கொடுக்கும் போது அவனின் குணமறிந்து கொடுக்கும்படி" கேட்டுக் கொண்டார். சிவபெருமானும் அப்படியே செய்வதாக ஒப்புக் கொண்டார்.



படிப்பகம்

www.padippakam.com



இது கதைதான். இதிலிருந்து நாம் நிறையப் புரிந்து கொள்ளவேண்டும். உள்ளத்தில் கெட்ட எண்ணங்களை வைத்துக்கொண்டு விரதங்கள் பிடிப்பதால் பலன் எதுவும் கிடையாது என்பதை நாம் முதலில் புரிவது நல்லதே. எனவே இந்தமதம் அந்தமதம் என்று ஓடுவதால் பிரயோசனமில்லை. இருக்கும் மதங்களில் இருந்து கொண்டே ஆத்மீகபலத்தைப் பெறவேண்டும். நாம் எப்படி பெரியவர்களாக இருக்கவேண்டும்?, ஏன்? என்பதை கீதை பின்வருமாறு கூறுகின்றது.

"பெரிய மனிதன்" எத்தகு செயல்களைச் செய்கின்றானோ அவன் அடிச்சுவட்டைப் பின்பற்றிப் பிறரும் அதையே செய்கின்றனர். தன் செயல்களால் எத்தரத்தை அவன் உவமை அமைத்துக் காட்டுகின்றானோ அதையே உலகம் முழுதும் பின்பற்றுகின்றது.

(பகவத்கீதை கர்மயோகம் 3: 21)

எனவே பிறப்பால் நமக்கு உறவான மதங்களின் வழியில் நின்று வணங்கி ஆத்ம திருப்தியைப் பெறுவோம்.

அன்பே சிவம்.

— நேசமகள் —



படிப்பகம்

www.padippakam.com



## மனுசாத்திரம்:

மனுவே இந்துதர்மத்தின் சட்டங்களை இயற்றியவராவர். நியாயத்திற்கும், சரியான செயலுக்கும் அவர் கூறியதே அளவுகோலாகும். மனு தந்த உபதேசம் மருந்தைப்போல உடம்புக்கு நல்லது என்று வேதம் கூறுகின்றது. இந்தியாவிலும் அதைச்சுற்றியுள்ள தெற்காசிய நாடுகளிலும் மனுவின் உபதேசங்கள் பெருவாரியாகப் பின்பற்றப்படுகின்றன. மனுவை மனித இனத்தின் தந்தையெனக் கூறுவர். சுவாயம்புவமனு என்பவர் தெய்வம் தந்த ஒரு லட்சப் பாடல்களிலிருந்து தன்னுடைய நூலை இயற்றியதீர்கக் கர்ணபரம்பரைக் கதைகள் சொல்லும். இதிகாச ஆசிரியர்கள் பல விளக்கங்களின் மூலம் மனுவுக்கு இந்து பண்பாட்டிலுள்ள முக்கியத்துவத்தை விளக்குகின்றனர்.

மனுவின் இறுதி உபதேசம் ஆன்மஞானத்தைப் பற்றிய கருத்தாகும். நீட்ஷே என்ற ஜேர்மனிய அறிஞர் மனுதருமசாத்திரம் பைபிளைக் காட்டிலும் உயர்ந்தது என்று கூறியுள்ளார். கீத் என்பவரோ வாழ்க்கையின் தத்துவத்தைச் சொல்லுகின்ற ஒரு நன்னூல் என்றும், மனித குலத்தின் பெரும் பகுதியின் ஆத்மாவைப் புரிந்து கொண்ட ஒருவரின் நூல் என்றும் கூறுகின்றார்.

தொகுப்பு: கந்தையா சிவானந்தன், ஜேர்மனி.



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

சகலவிதமான
அச்சு,
வடிவமைப்பு
வேலைகளுக்கும்

tuli publicatin
Pilevej 2c kælder
3300 Frederiksværk
Danmark
tlf. 42 289012 & 86 403805

படிப்பகம்